# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 27 வியாழக்கிழமை 12.06.2025 கதிர் 223







# விடுவிக்கப்பட்ட கற்கோவளம் இராணுவ முகாம் அருகில் மனித எலும்பு எச்சங்கள் அடையாளம்!





பருத்தித்துறை, ஜூன் 12

பருத்தித்துறையில் மனித மண்டையோட்டுடன் கூடிய மனித எலும்பு எச்சங்கள் இன்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

பருத்தித்துறை, கற்கோவளம் பகுதியில் அண்மையில் விடுவிக்கப்பட்ட இராணுவ முகாம் அருகில் உள்ள பகுதியிலேயே மண்டையோட்டுடன் கூடிய மனித எலும்பு எச்சங்கள் காணப்படுகின்றன.

கடந்த ஆண்டு பருவமழையின் போது ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் 78 வயதான முதியவர் ஒருவர் காணாமல்போயிருந்தார். ஆகவே, அவரது எலும்பு எச்சங்களாக இருக்கலாம் என அந்தப் பகுதி 7

### தையிட்டி விகாரை காணி உரிமையாளர்களுக்கு

# நட்டஈடு அல்லது மாற்றுக் காணி

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ். தையிட்டி விகாரை அமைந்துள்ள தனியார் காணிகளுக்கு நட்டஈடு அல்லது மாற்றுக் காணிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார். 7

# ஏறாவூர்பற்று சபை தமிழரசுக் கட்சி வசம்



மட்டக்களப்பு, ஜூன் 12

மட்டக்களப்பு, ஏறாவூர்பற்று பிரதேச சபையின் தவிசாளர், பிரதித் தவிசாளர் தெரிவு இன்று பிரதேச சபையின் மண்டபத்தில் (செங்கலடியில்) இடம்பெற்றது.

அதன்படி இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த முத்துப்பிள்ளை முரளிதரன் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதேவேளை, பிரதித் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சின்னத்துரை சர்வானந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

# துப்பாக்கி, தோட்டாக்களுடன் கடவத்தையில் ஒருவர் கைது!



கம்பஹா, ஜூன் 12

கம்பஹாவில் கடவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோனஹேன பிரதேசத்தில் துப்பாக்கி மற்றும் தோட் டாக்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 7

# வெருகல் படுகொலை நினைவேந்தல்



திருகோணமலை, ஜூன் 12

திருகோணமலை, வெருகல் படுகொலையின் 39ஆவது நினைவேந்தல் நிகழ்வு வெருகல் - பூநகர் பகுதியில் இன்று வியாழக்கிழமை மிகவும் உணர்வுபூர்வமான முறையில் நினைவு கூரப்பட்டது.

வெருகல் - ஈச்சிலம்பற்று முகாம்களில் தஞ்ச மடைந்திருந்த மக்களுக்கான உலர் 7

# வவுனியா சிறைக்குள் அதிரடியாக நுழைந்த சி.ஐ.டி. தீவிர விசாரணை

வவுனியா, ஜூன் 12

வவுனியா சிறைச்சாலைக்குத் திடீரென வருகை தந்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இன்று காலை சிறைச்சாலைக்குள் நுழைந்த சி.ஐ.டி. குழுவினர் வவுனியா சிறைச்சாலையைச் சோதனை செய்துள்ளதுடன், அங்கு தங்கியிருந்து கடமையில் ஈடுபட்ட அதிகாரிகளிடம் விசாரணைகளை முன்னெடுத்தனர். 7





# மின் கட்டண உயர்வினால் தொற்றா நோய்கள் அதிகரிக்கும்



கொழும்பு, ஜூன் .12

மின்சாரக் கட்டணங்களில் சமீபத்திய 15 சதவீத அதிகரிப்பு நாடு முழுவதும் உணவுப் பொருட்களின் விலை உயர்வுக்கு வழிவகுக்கும் என்று தேசிய நுகர்வோர் முன்னணி தலைவர் அசேல சம்பத் இன்று எச்சரித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய சம்பத், மின்சாரக் கட்டண உயர்வு தவிர்க்க முடியாமல் உணவு உற்பத்தி மற்றும் விநியோகச் செலவுகளைப் பாதிக்கும் என்றும், இதனால் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயரும் என்றும் கூறினார். அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுடன், பல குடும்பங்கள் சத்தான உணவை வாங்க முடியாமல் தவிக்கும் என்றும், இதனால் மக்களிடையே தொற்றா நோய்கள் (ஊேனுள) மேலும் அதிகரிக்கும் என்றும் அவர் கவலை தெரிவித்தார்.

“அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்,” என்று சம்பத் வலியுறுத்தினார், இந்த அதிகரிப்புகளின் சுமைகளைத் தாங்குவதிலிருந்து அப்பாவி நுகர்வோரைப் பாதுகாக்க விலைக் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்த அதிகாரிகள் ஏதேனும் திட்டங்களைக் கொண்டிருக்கிறார்களா என்று கேள்வி எழுப்பினார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அரசாங்கம் அளித்த நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள் குறித்தும் அவர் அரசாங்கத்தை விமர்சித்தார்.

“ஜனவரி மாதத்தில், மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னதாக, அரசியல் ஆதாயத்திற்காக மட்டுமே அரசாங்கம் மின்சாரக் கட்டணங்களை 20 சதவீதம் குறைத்தது. இந்தக் குறைப்புக்கு எந்த சாத்தியமான நிதி அடிப்படையும் இல்லை, மேலும் இது தவிர்க்க முடியாமல் இலங்கை மின்சார சபையை மேலும் நஷ்டத்தில் தள்ளியது,” என்று அவர் குற்றம் சாட்டினார்.

CEB-யால் ஏற்பட்ட நிதி இழப்புகளுக்கும், சமீபத்திய கட்டண உயர்வு மூலம் பொதுமக்கள் மீது சுமத்தப்பட்ட சிரமங்களுக்கும் இப்போது யார் பொறுப்பேற்க வேண்டும் என்று கேட்டு, அரசாங்கத்திடம் இருந்து பொறுப்புக்கூறலை சம்பத் கோரினார்.

நுகர்வோரின் நலனுக்கு முன்னுரிமை அளித்து, வாழ்க்கைச் செலவு உயர்வைத் தணிக்க பயனுள்ள நடவடிக்கைகளைச் செயல்படுத்துமாறு அதிகாரிகளை தேசிய நுகர்வோர் முன்னணி கேட்டுக் கொண்டது. (ஐ)

# இரண்டு மில்லியன் சாரதி அனுமதிப்பத்திரங்கள் ரத்து

இரண்டு மில்லியன் சாரதி

*2009 ஆம் ஆண்டுக்கு முன்பு வழங்கப்பட்டு, புதுப்பிக்கப்படாத அனைத்து சாரதி அனுமதிப்பத்திரங்களையும் ரத்து செய்வது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.*

*இது தொடர்பான பரிந்துரை மற்றும் கோரிக்கைகள் பொலிஸ் திணைக்களம் ஊடாக பொலிஸ்மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.*

*அதன்படி, மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகமே இதற்கு முழுப் பொறுப்பாவதால், இது தொடர்பாக விரைவில் அந்தத் திணைக்களம் ஒரு தீர்மானத்தை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

*இலங்கையில் தற்போது ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுள்ளதுடன், அதில் 4 மில்லியனுக்கும் அதிகமானோர் 2009 ஆம் ஆண்டுக்கு முன்பு பெற்ற சாரதி அனுமதிப்பத்திரங்களை வைத்துள்ளனர்.*

*இவற்றில், இரண்டு மில்லியனுக்கும் அதிகமானோர் கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரங்கள் வைத்துள்ளதால் அவற்றைப் புதுப்பிக்க வேண்டியது கட்டாயம் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.*

*அதன்படி, 2009 ஆம் ஆண்டுக்கு முன்பு பெறப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்களை ரத்து செய்யும் புதிய சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.* (ஐ)

மாபெரும் ROAD SHOW
எமது Nalin IT Exclusive நிறுவனத்தினால்
இம்மாதம் ஜூன் 12, 13, 14 ஆம் திகதிகளில்
Hikvision, Ezviz Camera களிற்கான 30%
விசேட விலைத்தள்ளுபடியுடன் கூடிய Road Show
நிகழ்வு ஸ்டான்லி றோட் முன்பாக நடைபெறவுள்ளது.
NALIN Information Technologies (Pvt) Ltd
No.51, Stanley Road, Jaffna. (Infront of BOC)
Contact No - 021 221 0404/ 076 359 4359 Email – nalin@nit.lk

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# பிரச்சினைகளுக்குத் துரித தீர்வு!

## மீனவர் சங்கப் பிரதிநிதிகளிடம் அமைச்சர் சந்திரசேகர் உறுதி





கொழும்பு, ஜூன் 12

மீனவர் சமூகத்தினர் எதிர்கொள்ளும் ஏனைய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் துரிதமாகவும், உரிய முறையிலும் தீர்வு காணப்படும் எனக் கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகருக்கும் மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையின் பல பாகங்களான மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் (காரைநகர் மற்றும் வேலணை) மற்றும் புத்தளம் (கற்பிட்டி) ஆகிய மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள், கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரை அமைச்சகத்தில் சந்தித்து, பல்வேறு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இந்தச் சந்திப்பின்போது, மீனவர் சங்கப் பிரதிநிதிகள், தமிழக மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும், கடல் வளங்களுக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்படுவதாகவும் கவலை தெரிவித்தனர்.

குறிப்பாக, நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டு மயிலிட்டி மீனவத்துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் படகுகளால் தமது கடற்றொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதால், அவற்றைப் பொருத்தமான முறையில் அகற்றித் தருமாறு மீனவத் தலைவர்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

மீனவர் சங்க பிரதிநிதிகளின் கோரிக்கைகளுக்கு பதிலளித்த அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்,

தமிழக மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது தொடர்பாக கடற்படையுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விடயம் குறித்து இந்திய உயர்ஸ்தானிகராலயத்திடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், மீனவர் சமூகத்தினர் எதிர்கொள்ளும் ஏனைய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் துரிதமாகவும், உரிய முறையிலும் தீர்வு காணப்படும் என அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் உறுதியளித்தார்.

மீனவர்களின் நலன் கருதி, கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு எப்போதும் மீனவர் சமூகத்தினருடன் இணைந்து செயல்படும் என்றும், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கும் என்றும் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மேலும் வலியுறுத்தினார்.

யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் - புத்தூர்

பரிசளிப்பு விழாவும் "மகாஜனனம்" நூல் வெளியீடும் - 2025

காலம்: 16.06.2025 திங்கட்கிழமை
நேரம்: காலை 9.00 மணி
இடம்: பாடசாலை முத்துலிங்கம் மண்டபம்

தலைமை
திரு. பரமநாதன் கமலதாசன்
பாடசாலை முதல்வர்

பிரதம விருந்தினர்
கௌரவ திரு. ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன்
யாழ் / கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்,
கல்வி, உயர்கல்வி, மற்றும் தொழில் கல்வி சார்
ஆலோசனைக்குழு உறுப்பினர்

சிறப்பு விருந்தினர்
திரு. சந்திரமௌலீசன் லலீசன்
முதல்வர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்

கௌரவ விருந்தினர்கள்
திருமதி கீர்த்தனா ராகுலன்
கௌரவ திரு. துரைசிங்கம் சுரேஸ்குமார்
உப தலைவர், பழைய மாணவர் சங்கம்,
உறுப்பினர், வலிகிழக்கு பிரதேச சபை

அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்

பாடசாலைச் சமூகம்

# வேகமாக அதிகரிக்கும் எலிக்காய்ச்சல்



கொழும்பு, ஜூன் .12

நாடு முழுவதும் எலிக்காய்ச்சல் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. இரத்தினபுரி, குருநாகல், கேகாலை, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களிலிருந்தே அதிக நோயாளிகள் பதிவாகியுள்ளதாக தொற்றுநோயியல் பிரிவின் வைத்திய நிபுணர் துஷானி தபரேரா தெரிவித்தார்.

இந்த நோய் ஒரு பாக்டீரியாவால், குறிப்பாக பாலூட்டிகளின் சிறுநீர் வழியாகப் பரவுகிறது. உண்மையில், இந்த பாக்டீரியா எலிகளின் சிறுநீர் அமைப்பில் வாழ்கிறது. எலிகள் தண்ணீர் குடிக்கும்போது, அவற்றின் சிறுநீர் தண்ணீரிலோ அல்லது மண்ணிலோ கலக்கிறது. நாம் அந்த மண் அல்லது தண்ணீரை பயன்படுத்தும் போது, மக்களுக்கு இந்த நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

# பொலிஸ் அதிகாரியை மிரட்டிய எம்.பி குறித்து விசாரணை

சட்டவிரோத மதுபான வியாபாரி ஒருவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்ததற்காக வெலிபென்ன பொலிஸில் பணிபுரியும் ஒரு பொலிஸ் சர்ஜண்டை திட்டியதாகக் கூறப்படும் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். அந்தப் பகுதியில் சட்டவிரோத மதுபான வர்த்தகத்தில் ஈடுபட்ட ஒரு சந்தேக நபரை பொலிஸ் சார்ஜென்ட் கைது செய்ததை அடுத்து, ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ ரணசிங்க அவரை கடும் வார்த்தைகளால் திட்டியதாகக் கூறப்படுகிறது.

பின்னர் சர்ஜென்ட், சம்பவம் குறித்து வெலிபென்ன பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் முறைப்பாடு அளித்தார். அதன்படி, வவுனியாவிற்கு இடமாற்றம் செய்வதாக சர்ஜண்டை நாடாளுமன்றஉறுப்பினர் மிரட்டியதாகக் கூறப்படுகிறது. பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமிருந்து சர்ஜென்ட்டின் எண்ணைப் பெற்று, மொபைல் போன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் இந்த மிரட்டலை விடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அந்த எம்.பி., பொலிஸ் அதிகாரியை அழைத்து, அஜித் என்ற பொலிஸ் அதிகாரியின் வீடு உட்பட விவரங்களைக் கேட்டறிந்ததாகவும், பின்னர் தனிநபர்கள் மீது பொய் வழக்குகளைப் பதிவு செய்ததாக அவர் மீது குற்றம் சாட்டியதாகவும் கூறப்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தி தன்னை கடுமையாகக் மிரட்டியதாகவும், இடமாற்ற அச்சுறுத்தலை மீண்டும் வலியுறுத்தியதாகவும் சர்ஜென்ட் முஜஊயிடம் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினருக்கும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் இடையிலான உரையாடல், சர்ஜென்டின் குற்றச்சாட்டுகள் ஆகியவை பொலிஸ் தகவல் புத்தகத்தில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. வாராந்திர அமைச்சரவை சந்திப்பின் போது இந்த சம்பவம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டபோது, விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜெயதிஸ்ஸ உறுதிப்படுத்தினார், மேலும் "உண்மை விரைவில் வெளிப்படுத்தப்படும்" என்றார்.

இதற்கிடையில், வெலிபென்ன பொலிஸ் அதிகாரியிடமிருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும், உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் தலைமையில் முறையான விசாரணை நடைபெற்று வருவதாகவும் பொலிஸ் தெரிவித்தனர். (ஐ)

# குஜராத்தில் ஏர் இந்தியா விமானம் விழுந்து நொறுங்கியது பயணிகள் 242 பேர் கதி என்ன?



குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் இருந்து 242 பயணிகளுடன் லண்டனுக்கு புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் விழுந்து நொறுங்கியது. தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நடந்து வருகிறது.

குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் இருந்து லண்டனுக்கு புறப்பட்ட விமானம் சில நிமிடங்களில் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது. இந்த விபத்து மதியம் 1.17 மணிக்கு நிகழ்ந்துள்ளது. விபத்தில் சிக்கிய விமானம் ஏர் இந்தியா நிறுவனத்திற்கு சொந்தமானது.

இந்த விமானத்தில் பயணிகள் 242 பேர் பயணம் செய்துள்ளனர். விழுந்து நொறுங்கிய விமானத்தில் பற்றி எரியும் தீயை அணைக்கும் பணி நடந்து வருகிறது. விமானத்தில் பயணம் செய்த பயணிகளையும் தேடும் பணியில் மீட்பு படையினர் ஈடுபட்டுள்ளனர்.

விமானம் விபத்துக்குள்ளான இடத்தில் விண்ணை முட்டும் அளவுக்கு கரும் புகைகள் சூழ்ந்துள்ளது. ஏர் இந்தியா விமானம் விழுந்து நொறுங்கி தீ பற்றி எரியும் வீடியோ சமூக வலைதளத்தில் வெளியாகி உள்ளது. (ஐ)

## தென்காசியில் சோகம்! ஆதரவற்றோர் இல்லத்தில் 3 பேர் பலி 8 பேர் மருத்துவமனையில் அனுமதி



தென்காசி அருகே ஆதரவற்றோர் இல்லத்தில் வசித்த வந்த 3 பேர் கெட்டுப்போன உணவு உண்டதால் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

தென்காசிமாவட்டம், சுந்தரபாண்டியபுரத்தில் ஆதரவற்றோர் இல்லம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த இல்லத்தில் வசித்து வந்த 11 பேருக்கு நேற்றிரவு உணவு அருந்திய பிறகு உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளது.

இதனால் சங்கர் கணேஷ், 48, முருகம்மாள்,45, அம்பிகா,40, ஆகிய 3 பேர் உயிரிழந்தனர். மேலும் 8 பேர் உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இது குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இரவு வழங்கப்பட்ட உணவு கெட்டுப்போயிருக்கலாம் அல்லதுஉணவுவிஷத்தன்மைகொண்டதாகஇருந்திருக்கலாம் என்று சந்தேகம் எழுந்துள்ளது. இது தொடர்பான உணவுப் பாதுகாப்புத்துறையினர், சுகாதாரத்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ)

## 'தமிழ் வாழ்க' என்று எழுதுவதை தவிர, தமிழ் வளர்ச்சிக்கு என்ன செய்தீர்கள் தி.மு.க.,வுக்கு சீமான் கேள்வி



திருச்செந்தூர் கோவில் குடமுழுக்கை தமிழில் நடத்த வலியுறுத்தி நாம் தமிழர் கட்சி நடத்தவிருந்த போராட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்த அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், இதுதான் திராவிட மாடல் தி.மு.க., அரசு தமிழை வளர்க்கும் முறையா? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

அவரது அறிக்கை நாம் தமிழர் கட்சியின் வீரத்தமிழர் முன்னணி மற்றும் தெய்வத்தமிழ் பேரவை இணைந்து திருச்செந்தூர் முருகப்பெருமான் கோவில் குடமுழுக்கை தமிழில் நடத்த வலியுறுத்தி வரும் 14ம் தேதி நடத்தவிருந்த அறப்போராட்டத்திற்கு திமுக அரசு அனுமதி மறுத்திருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது.

முதலில் போராட்டம் நடத்த அனுமதித்த காவல்துறை அனைத்து ஏற்பாடுகளையும்செய்துவிட்ட பிறகு, கூட்டம் நடப்பதற்கு ஒரிரு நாட்களுக்கு முன்பு அனுமதி மறுப்பது எவ்வகையில் நியாயம்? முதலிலேயே காவல்துறைக்குத் தெரியாதா குறிப்பிட்ட இடத்தில் போராட்டம் நடத்த அனுமதிக்கலாமா? கூடாதா என்று? அந்த இடத்தில் போராட்டம் நடத்தக்கூடாதென்றால் மாற்று இடத்தை முன்பே வழங்கி இருக்கலாமே? அதனை விடுத்து போராட்டம் நடத்தவே அனுமதி மறுப்பது ஏன்? எதனால்? யாருக்குப் பயந்து, யாருடைய உத்தரவின் பேரில் காவல்துறை முதலில் வழங்கிய அனுமதியை தற்போது மறுக்கிறது? திருச்செந்தூர் காவல்துறை அதிகாரிகளின் இத்தகைய அறமற்றச்செயல், தி.மு.க., ஆட்சியில் காவல்துறை எந்த அளவிற்கு தரம்தாழ்ந்துவிட்டது என்பதையே காட்டுகிறது. வெட்கக்கேடு!

ஹிந்தி எதிர்ப்புப் போரில் தமிழர்கள் செய்த அளப்பரிய ஈகங்களைத் தனதாக்கி, மொழிப்போர் மூலம் கிடைத்த முகவரியில் ஆட்சி அதிகாரத்தை அடைந்த தி.மு.க., அரசு கடந்த 60 ஆண்டுகளில் தமிழ் மொழியை மெல்ல மெல்லச் சிதைத்து அழித்துவிட்டது. 6 முறை தி.மு.க., தமிழர் நிலத்தை ஆண்டபிறகும் தமிழ்நாட்டில் இன்றுவரை அன்னைத் தமிழ்மொழி வழிபாட்டு மொழியாகவோ, வழக்காட்டு மொழியாகவோ, பண்பாட்டு மொழியாகவோ, பயன்பாட்டு மொழியாகவோ, ஆட்சி மொழியாகவோ, அதிகார மொழியாகவோ இல்லாத கொடுஞ்சூழல் நிலவுவது தமிழ்த்தேசிய இனத்திற்கு நிகழ்ந்த வரலாற்றுப் பெருந்துயராகும்.

அரசு அலுவலகங்களில் 'தமிழ் வாழ்க' என்று எழுதியதைத் தவிர, தி.மு.க., அரசு அன்னை தமிழின் வளர்ச்சிக்குச் செய்த நன்மை என்ன? தமிழ் வாழ்க என்று அரசு நிறுவனத்தில் எழுதி வைத்துவிட்டு தனியார் நிறுவனங்களைத் தமிழில் பெயர் வைக்கக்கோரி போராட்டம் நடத்தியவர்களை கைது செய்து கொடுமையும் புரிந்தது தி.மு.க., அரசு.

தமிழில் குடமுழுக்கு நடத்த வலியுறுத்தி தமிழர்களைப் போராட்டம் நடத்தும் நிலைக்குத் தள்ளி இருப்பதும், அந்தப் போராட்டத்திற்கும் அனுமதி மறுப்பதும் எதேச்சதிகாரத்தின் உச்சமாகும். இதன் மூலம் 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்!, 'வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்' என்ற வசனங்கள் எல்லாம் தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்காகச் சொல்லப்படும் திமுகவின் தேர்தல் கால வெற்று முழக்கங்கள் என்பது மீண்டுமொருமுறை நிறுவப்பட்டுள்ளது. இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# 50 வாக்குறுதியைக் கூட நிறைவேற்றாத தி.மு.க.,: அண்ணாமலை குற்றச்சாட்டு

தி.மு.க., அளித்த 500க்கும் மேற்பட்ட தேர்தல் வாக்குறுதிகளில் 50ஐ கூட நிறைவேற்றவில்லை என தமிழக பா.ஜ., முன்னாள் தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டி உள்ளார். கோவையில் நிருபர்கள் சந்திப்பில் அண்ணாமலை கூறியதாவது: தி.மு.க.,போல் அல்லாமல் தேர்தல் வாக்குறுதியை நாங்கள் நிறைவேற்றி உள்ளோம். தமிழகத்தில் கல்லூரிகள் அதிகம் இருக்கும் மாவட்டம் கோவை. கோவையில் போதைப்பொருள் தடுப்பு அலுவலகத்தை திறக்க வலியுறுத்துவோம். கோவையில் கல்லூரி மாணவர்களிடையே போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளது.

கொரோனா தொற்றில் நாம் மாட்டியும் கூட, நம்ம சொன்ன டார்க்கெட்டை நோக்கி போய் கொண்டு இருக்கிறோம். சமீபத்தில், உலகின் 4வது பெரிய பொருளாதார நாடாக மாறி இருக்கிறோம். வேகமாக வளரும் பொருளாதார



நாடாக இருக்கிறோம். மத்திய அரசு திட்டங்களை மாநில அரசு முடக்க பார்க்கிறது.

தி.மு.க., அளித்த 500க்கும் மேற்பட்ட தேர்தல் வாக்குறுதிகளில் 50ஐ கூட நிறைவேற்றவில்லை. பெட்ரோல் விலை உயர்வில் மத்திய அரசின் பங்கு ஏதும் இல்லை. தமிழகம் கொடுத்த ஒவ்வொரு பணத்துக்கும் மத்திய அரசு திரும்ப கொடுத்துள்ளது. பா.ஜ., அதிக தொகுதிகளில் போட்டியிட வேண்டும் என்பது எனது விருப்பம். நான் பா.ஜ., தொண்டன். உயிர் இருக்கும் வரைக்கு இந்த கட்சியின் வளர்ச்சிக்காக மட்டும் நான் இருப்பேன். மற்ற கட்சியின் வளர்ச்சிக்காக நான் இல்லை. தொண்டனாக கட்சி எடுக்கும் முடிவுக்கு கட்டுப்படுவேன். சில இடங்களில் எங்கே வாயை மூடி கொண்டு இருக்க வேண்டுமோ, அங்கே மூடி கொண்டு இருக்கிறேன். உறுதியாக தமிழகத்தில் அரசியல் மாற்றம் நடக்க வேண்டும். கூட்டணிக்கு எண்ணிக்கையை விட எண்ணம் முக்கியம். கூட்டணி இரண்டு. பொருந்தும் கூட்டணி. பொருந்தா கூட்டணி என இரண்டு வகை இருக்கிறது. தமிழகத்தில் அ.தி.மு.க., பா.ஜ., கூட்டணி பொருந்துகிற கூட்டணியாக வரும் காலத்தில் மாறும். இவ்வாறு அண்ணாமலை கூறினார். (ஐ)

# அன்புள்ள ஆண்களுக்கு!



“ஆண்கள் இப்போதெல்லாம் மாறிவிட்டார்கள். முன்புபோல் இல்லை. அவ்வளவு விட்டுக்கொடுத்துப் போகிறார்கள். எதையுமே பெரிதுபடுத்துவதில்லை. வீட்டில் ஏற்படுகிற பல பிரச்சினைகளுக்குப் பெண்களே காரணம்.” இவைதானே சமூகத்தின் குரல். இந்தக் குரலின் உண்மைத்தன்மையைப் பரிசோதித்துப் பார்க்கலாம்.

நம் வீடுகளில் நாம் பார்க்க நம் கண்முன்னே வளர்ந்த ஆண் பிள்ளைகள்கூட அவர்களைவிடச் சற்றே பெரிய பெண்பிள்ளையிடம் ‘குரல் உயர்த்திப் பேசும்’ பண்பு மிக இயல்பாக நிகழ்கிறது. இயல்பாகவே பார்க்கவும் படுகிறது.

இதையே இப்படி எண்ணிப் பார்ப்போமே. தன்னைவிட வயது மூத்த அல்லது தன் வயதில் உள்ள ஆண்பிள்ளையை ஒரு பெண்பிள்ளை குரலை உயர்த்திப் பேசினால் எப்படி இருக்கும்? சிந்திக்கும்போதே தவறெனத் தோன்றுகிறதுதானே?

இது தவறு எனில் முந்தைய காட்சி மட்டும் எப்படிச் சரியாக இருக்க முடியும்? எப்போதுமே இயல்பாக ஒரு பெண்பிள்ளை குரலை உயர்த்தி ஆண்பிள்ளையிடம் பேசிவிடவே முடியாது. அப்படிக் குரல் உயர்த்துவதை நாம் விரும்பவும் இல்லை.

ஆதிக்கத்தை மறைபொருளாகக் கொண்டு யார் யாரிடம் குரல் உயர்த்தினாலும் அது தவறு. அப்படியிருக்க, தன்னைவிட வயது மூத்த பெண்ணிடம் அந்த வீட்டுப் பதின்ம வயதுச் சிறுவன் குரலை உயர்த்தலாம் என்கிற தைரியத்தை எது கொடுக்கிறது?

கவனித்துப் பார்த்தால் நம் குடும்ப அமைப்புகள்தான் கொடுக்கின்றன என்பது புரியும். அதிலும் குறிப்பாக அந்தப் பெண், ஆண்-இரு பிள்ளைகளின் அம்மாக்களே இதனைப் பெருமையாகக் கருதுவதும் பேசுவதும் உண்டு.

“அம்மு வாசல்ல நின்றாலே தம்பி உள்ள போகச் சொல்லுவான்” என அம்மாக்களுக்குள் இந்தப் பெருமை நீளும்.

உண்மையிலேயே இதில் பெருமைப்பட ஒன்றுமேயில்லை. நம் வளர்ப்பு சரியில்லை என நாம் வருத்தப்பட வேண்டிய ஒன்றிற்கு மகிழ்ச்சி அடையப் பழகியிருக்கிறோம். இதுவே பெருமை என நம் ஆழ்மனம் நம்புகிறது.

இந்தச் சிறுவனைவிட வயதும் சமூகப் பழக்கமும் அதிகமே கொண்டவள் அந்த வயது மூத்தவள். அவள் தன்னைவிட அனுபவமும் வயதும் குறைந்த சிறுவனால் அதிகாரம் செய்யப்படுகிறாள். இது தவறு என்பது அந்தச் சிறுவனின் வளரும் மூளைக்குள் பதிய வேண்டும்.

அப்பாக்கள் முழுநேரப் பணியில் இருப்பதால் பெரும்பாலும் அம்மாக்களின் கண்டிப்பிலும் கவனிப்பிலுமே பிள்ளைகள் வளர்கின்றனர். பதின்ம வயதை எட்டியதும் இந்த ஆண்பிள்ளைகளுக்குக் கூடுதலாகக் கொம்புகளோ திமில்களோ முளைத்துவிட்டதைப்போல் நடந்துகொள்கின்றனர். இந்த நடத்தையை வீடுகள் குறிப்பாக அம்மாக்கள் பெருமையாக நினைக்கின்றனர்.

“அவனுக்குச் சாப்பிட முதல் கை கழுவக்கூட தண்ணீ எடுத்து வைக்கணும்.” “நான் நைட்டி போட்டா தம்பிக்குப் புடிக்காது”, “தண்ணீ கூட அவனா எடுத்துக் குடிக்க மாட்டான்” என பூரிப்போடு சில அம்மாக்கள் சொல்வதைக் கேட்க முடிகிறது. வெளியே அவள் பூரிப்போடு சொல்வதைப்போலத் தெரியலாம். ஆனால் உள்ளுக்குள் ஒருவித அச்சமும் பதற்றமும் இயலாமையும் சூழ அவள் மனத்துக்குள் புழுங்கி அழுகையை முழுங்குகிறாள்.

’இதற்காகவா இத்தனை நாள்கள் இந்தப் பிள்ளையை இப்படி வளர்த்தோம்’ என அவள் மனதில் ஓர் எண்ணம் ஓடிக்கொண்டே இருக்கும். தான் எந்த இடத்தில் சரியாக வளர்க்கத் தவறினோம் என அவள் நிதானிப்பதற்குள் இந்த உருட்டல் மிரட்டல் வளர்ந்து எங்கோ சென்றிருக்கும்.



சரி. வீட்டில் இருக்கிற அப்பா இதையெல்லாம் கவனிக்கிறாரா, இல்லையா?

அம்மாவை அதட்டுகிற ஆண்பிள்ளைகளை நினைத்து அப்பாக்களும் உள்ளூற மகிழ்ச்சி அடைவதும் உண்டு. பனியனும் அரைக்கால் டிரவுசருமாக ஊரையே வலம் வருகிற பிள்ளைகள்தான் அம்மாக்களைச் சுடிதாரோ நைட்டியோ போடக் கூடாது என அவர்களது உடைகளில் தலையிடுகின்றனர்.

இடுப்பும் வயிறும் தெரிய புடவை உடுத்துவது ஓகே. முழுதாக மூடும் சுடிதார் வேண்டாம். சற்றே வயது கூடிவிட்டால் அம்மாவை அதட்டலாம் என்கிற ஆதிக்க மூளையை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும்.

தெருவில் இருக்கிற நான்கு சிறுவர்கள் சேர்ந்துகொண்டு நைட்டிமீது துப்பட்டா போடாத அம்மாக்களைக் கிண்டல்செய்வது தவறு என்று நமக்குத் தோன்றவில்லை. இவள் எத்தனை வயதானாலும் இழுத்துப் போர்த்த வேண்டும் என்பது பல்லாயிரம் ஆண்டுகால அழுக்கும் அடர்ப்பாசியும்தான்.

இன்னமும் பிள்ளைகள் எந்த வகுப்புப் படிக்கின்றனர் எனத் தெரிந்து வைத்திருக்காத அப்பாக்கள், உருட்டல் மிரட்டலோடு பிள்ளைகளை பள்ளிக்கு அழைக்க வந்துகொண்டுதான் உள்ளனர்.

வகுப்பில் இருப்பது பெரும்பாலும் பெண் ஆசிரியர் என்பதால் கூடுதல் அதட்டலோடு வந்து அழைத்துப் போக விரும்பும் பழக்கம் அப்பாக்களிடம் இருக்கிறது. பேருந்தின் நடத்துநர்கள் பலரும்கூட இதற்கு விதிவிலக்கல்ல. கைப்பையோடு பெண்கள் பேருந்தில் ஏறினால் அநாவசியமாகவே ஓர் அதட்டல் கொடுக்கப்படுகிறது.

பெண்களின் நிலைதான் எவ்வளவு மோசமாக இருக்கிறது. அவள் குழந்தையாக இருந்தபோது அப்பாவுக்குப் பயப்பட வேண்டும். பருவமடைந்தபின் அண்ணனுக்கும், திருமணத்துக்குப்பின் கணவருக்கும் பயப்பட வேண்டும். அவளுக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்து வளரும்போது அவனுக்கும் பயப்பட வேண்டும். பெண் பிள்ளையைப் பெற்ற அம்மா எனில் மருமகனுக்குக் கூடுதல் மரியாதையும் கொடுக்க வேண்டும்.

இங்கே விதிவிலக்காகச் சில ஆண்கள் இருக்கின்றனர். அவர்களது எண்ணிக்கையை விரல் விட்டுச் சொல்லிவிடலாம். புள்ளிவிவரம் இல்லாத தரவாக இருப்பினும் இது எவ்வளவு உண்மை என உங்களைச் சுற்றி இருக்கிற பெண்களிடம் கேட்டுப் பாருங்கள்.

ஒரு நாளுக்கு ஒருமுறையேனும் ஏதோ ஓர் ஆணால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ போகிற போக்கில் ஒரு பெண் சீண்டப்பட்டு அவமானப்படுத்தப்படுகிறாள்.

சாலையில் இருசக்கர வாகனத்தில் முன்னே செல்வது ஒரு பெண் எனில் எவ்வளவு முன்தீர்மானத்தோடு ஆண் மூளை அவளை மதிப்பிடுகிறது் ஏளனப் பார்வையையோ எரிச்சல் பார்வையையோ அவளை நோக்கி வீசுகிறது. நமட்டுச் சிரிப்பு சிரிக்கிறது. தேவையே இல்லாமல் அவளது நிதானத்தை சீர்குலைக்க அவள் வாகனத்தை முந்திச்சென்று ஒரு ’ணு’ போட வைப்பது எது? சுனிதா வில்லியம்ஸ் போல விண்வெளிக்கே சென்றுவந்தாலும் “இவர்களுக்கு வாகனம்கூட இயக்கத் தெரியாது” என எது சொல்ல வைக்கிறது?

ஒரு பெண் எத்தனையோ படித்துப் பட்டங்கள் பெற்று மதிப்புக்குரிய பணியிலும் பதவியிலும் பொறுப்பிலும் இருக்கலாம். இருந்தாலுமே வீட்டில் அவளது பணி அனுபவம் ஒரு பொருட்டல்ல என்பதே உண்மை. அவளது துறைசார்ந்த ஒரு விசாரிப்புக்கே அந்தக் குடும்பம் அதே பணியிலுள்ள வேறோர் ஆணின் அனுபவத்தையும் வழிகாட்டலையுமே எதிர்பார்க்கிறது. அதுவே சரியாக இருக்குமென குடும்பம் நம்புகிறது.

எப்போதுமே இங்கே ’எல்லாம் தெரிந்தவர்களாக’ ஆண்களே இருக்க நினைப்பதன் வெளிப்பாடே இவ்வகைச் செயற்பாடுகள். குடும்பத்தின் முக்கியமான முடிவுகள் அனைத்தும் ஆண்களாலேயே எடுக்கப்படுகிறது. இந்த அவமதிப்புகளின் பாரம் தாங்காமல் பேசத் தொடங்குபவள் ’ராட்சசி’ ஆகிவிடுகிறாள். தந்தைகளின் இளவரசிகளாக வளர்க்கப்படுகிறவர்கள் கணவர்களின் பட்டறைகளில் ராட்சசியாகவோ தேவதையாகவோ வார்க்கப்படுவதற்கான அச்சு அந்த ஆண்கள் பெண்களை எவ்வாறு நடத்துகிறார்கள் என்பதிலேயே இருக்கிறது.



குடும்பத்துக்காக எவ்வளவு நேரம் ஒதுக்குகிறீர்கள் என்பதிலேயே உங்கள் மன அமைதி இருக்கிறது. நீங்கள் அமைதியை வெளியே தேடுகிறவரை, குடும்பங்களில் அமைதி பெருகாது என்பதை உணருங்கள்.

இறுதியில் எந்த நட்பும், எந்த வேலையும், எந்தப் பொழுதுபோக்கும், எந்தச் செயலியும் படுக்கையில் விழுந்தால் உங்களுக்குத் துணை நின்று டயபர் மாற்றிடாது. அதைக் கொஞ்சமேனும் பருவத்தே உணர்ந்தால் நாற்பதுகளிலேனும் நிம்மதி கிடைக்கும்.

# 6 மாதங்களில் 25வது முறையாக வெடித்தது ஹவாய்த்தீவு எரிமலை ஆய்வாளர்கள்



அமெரிக்காவின் ஹவாய் தீவில் அமைந்துள்ள கிலாவியா எரிமலை வெடித்து உள்ளது. கடந்த 6 மாதங்களில் மட்டும் 25வது முறையாக வெடித்துள்ளது.

அமெரிக்காவுக்கு சொந்தமான ஹவாய் தீவு, பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ளது. அமெரிக்க நிலப்பரப்பில் இருந்து தென்மேற்கே 2,000 மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ள இந்த தீவு, எரிமலைகளுக்கு புகழ் பெற்றது. சுற்றுலாப் பயணிகளின் வருகையும் ஆண்டு முழுவதும் இருக்கும். இங்குள்ள 5 பெரிய எரிமலைகளில் கிலாவியா ஒன்றாகும்.

1983ம் ஆண்டு முதல் எரிமலைக்குழம்பு தொடர்ந்து வெளியேறி வருகிறது. இந்த எரிமலை 4 ஆயிரம் அடி உயரம் கொண்டது. கடந்த 2018ம் ஆண்டு மே மாதம் வெடித்து சிதறியது. எரிமலைக் குழம்பில் 700 வீடுகள், சுற்றுலா மையங்கள், சாலைகள் சேதமடைந்தன. கடந்த 2021ம் ஆண்டு செப்டம்பர் மாதம் மீண்டும் வெடித்து சிதறியது. அப்போதும் பெரும் சேதம் ஏற்பட்டது.

தற்போது, கிலாவியா எரிமலை வெடித்துள்ளது. கடந்த 6 மாதங்களில் மட்டும் 25வது முறையாக வெடித்துள்ளது. அந்த எரிமலையின் வடக்கு துவாரத்தின் வழியாக வெளியேறிய எரிக்குழம்புகள் 330 அடிக்கு சீறி உள்ளது. இது குறித்து ஆய்வாளர்கள் கூறியதாவது:

கடந்த 6 மாதங்களாக அவ்வப்போது சீற்றம் பெற்று, எரிக்குழம்புகள் வெளியேறி வருகிறது. கிலாவியா எரிமலை எப்போது வேண்டுமானாலும் வெடிக்கும் அபாயம் நிலவுகிறது. நாங்கள் தொடர்ந்து கவனித்து வருகிறோம், என்றனர். கடந்த 200 ஆண்டுகளாக தொடர்ந்து வெடித்து வருகிறது. ஹவாய் எரிமலை ஆய்வகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இதனை ஆராய்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமெரிக்காவின் கோல்டு கார்டு திட்டம் அமலுக்கு வந்துள்ளதாக டிரம்ப் அறிவிப்பு



அமெரிக்காவின் கோல்டு கார்டு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார். இந்தத் திட்டத்தின் மூலம் அமெரிக்க குடியுரிமை பெற முடியாது என்றும் அவர் விளக்கமாக கூறியுள்ளார்.

அமெரிக்க அதிபராக பொறுப்பேற்ற பிறகு, கோல்டு கார்டு எனும் திட்டத்தை டிரம்ப் அறிவித்தார். அதாவது, ரூ.41.50 கோடியை அமெரிக்க அரசுக்கு செலுத்தும் வெளிநாட்டவர்கள் இந்த கோல்டு கார்டை பெறலாம். இதன்மூலம், அவர்கள் அமெரிக்க குடியுரிமையை பெற முடியும் என்று கூறப்பட்டது.

இந்த நிலையில், கோல்ட் கார்டு பெறும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார். இது குறித்து தனது ட்ரூத் சோஷியல் தளத்தில் கூறியிருப்பதாவது ரூ.41.50 கோடி செலுத்தும் வெளிநாட்டவர்கள் டிரம்ப் கார்டு (கோல்டு கார்டு) பெறமுடியும். இது கிரீன் கார்டை போன்றது. மிகவும் பயனுள்ளது. உலகின் மிகச்சிறந்த நாடு மற்றும் மிகப்பெரிய சந்தையில் நுழைவதற்கு பதிவு செய்வது எப்படி? என்று கேட்டு ஆயிரக்கணக்கானோர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வருகிறார்கள். இந்த கோல்ட் கார்டு அமெரிக்க குடியுரிமையை உறுதியளிக்காது. மாறாக உலகின் மிகச் சிறந்த நாட்டில் வர்த்தகம் செய்யலாம். எனவே, இந்த விவகாரத்தில் காங்கிரஸின் ஒப்புதலை பெற தேவையில்லை, எனக் குறிப்பிட்டிருந்தார்.

அண்மையில் இது குறித்து அமெரிக்க வணிக செயலாளர் ஹோவார்ட் லுட்னிக் கூறியதாவது: ரூ.41.50 செலுத்தி அமெரிக்க பொருளாதாரத்தில் பங்கேற்க விரும்பும் இந்தியர்களிடையே பெரும் வரவேற்பைப் பெறும், என்றார். (ஐ)

# பிணைக்கைதிகள் 2 பேர் உடல் மீட்புஇஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு



பிணைக் கைதிகள் 2 பேரின் உடல்கள் மீட்கப்பட்டு உள்ளது," என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

2023ம் ஆண்டு அக்டோபரில் தொடங்கிய இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் ஒன்றரை ஆண்டுகளுக்கு பிறகும் நீடிக்கிறது. தங்கள் நாட்டில் இருந்து காசா முனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்தி சென்ற பிணைக்கைதிகளை மீட்க அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது.

அவர்களில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், ராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது. பிணைக் கைதிகளில் சிலர் ஹமாஸ் ஆயுத குழுவினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டன. தற்போது, பிணைக் கைதிகள் 2 பேரின் உடல்கள் மீட்கப்பட்டு உள்ளது என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்தார்.

இது குறித்து அவர் கூறியதாவது: காசாவில் பிணைக் கைதியாக இருந்த யாயர் யாகோவின் உடலும், மற்றொரு பிணைக் கைதியின் உடலும் மீட்கப்பட்டு உள்ளது. இஸ்ரேலின் அனைத்து குடிமக்களுடனும் சேர்ந்து, அன்புக்குரியவர்களை இழந்த குடும்பங்களுக்கு எங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாங்கள் ஓய்வெடுக்க மாட்டோம். எங்கள் அனைத்து பிணைக்கைதிகளும், உயிருடன் இருப்பவர்களும், வீழ்ந்தவர்களும் வீட்டிற்கு கொண்டு வரும் வரை நாங்கள் அமைதியாக இருக்க மாட்டோம். இவ்வாறு பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார். (ஐ)



# வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட பள்ளி பஸ் தென் ஆப்ரிக்காவில் 49 பேர் பலி

தென் ஆப்ரிக்காவில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் பள்ளி குழந்தைகள் உள்பட 49 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

தென் ஆப்ரிக்காவின் பல்வேறு பகுதிகளில் நிலவி வந்த கடும் பனி மற்றும் கனமழையின் காரணமாக, வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கிழக்கு கேப் மாகாணம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஏராளமான வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. இதனால், மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. மேலும், சாலைகளும் மூடப்பட்டுள்ளன.

டிகோலிக்னி கிராமத்தில் ஒரு பள்ளி பஸ் ஒன்று ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால், தண்ணீரில் அடித்து செல்லப்பட்டது. இதில், பள்ளி பஸ்ஸில் பயணித்த மாணவர்கள் மற்றும் டிரைவர் என 13 பேர் உயிரிழந்தனர். அதேபோல, பிற பகுதிகளில் ஏற்பட்ட மழை மற்றும் வெள்ளப்பெருக்கால் ஏற்பட்ட விபத்துக்களால் மொத்தம் 49 பேர் உயிரிழந்ததுள்ளனர்.

சமீப காலங்களில் தென் ஆப்ரிக்கா பல முறை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த 2022ல், டர்பன் மற்றும் குவாசுலு-நடால் மாகாணத்தில் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் 400 பேர் வரை உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விடுவிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்கள் சந்தேகிக்கின்றனர். இது தொடர்பாகப் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதேநேரம் வவுனியா சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் சிறைச்சாலையில் பணியாற்றும் பத்துக்கும் மேற்பட்டவர்களை விசாரணைக்காக அனுராதபுரத்துக்கு அழைத்துச் சென்றனர்.

அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், சி.ஐ.டியினர் சிறைச்சாலைகளில் விசாரணை வேட்டையில் களமிறங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## துப்பாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடவத்தை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில்

மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் கோனஹேன, வேபட பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடையவர் ஆவார்.

சந்தேகநபரிடம் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட போர 12 ரக துப்பாக்கி மற்றும் 5 தோட்டாக்கள் என்பனப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கடவத்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வெருகல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உணவுப் பொதிகளை ஏற்றி வந்த அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு 39 வருடங்களாகியும் நீதியும், நிவாரணங்களும் கிடைக்காத நிலையில் இந்த நினைவேந்தலைப் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

நினைவேந்தல் நிகழ்வில் முதலில் ஆத்ம சாந்தி வேண்டிய பூஜைகள் இடம்பெற்று பொதுச் சுடர் ஏற்றி வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உருவப் படங்களுக்கு விளக்கேற்றி மலர்தூவி ஆத்மா சாந்தி வேண்டி நினைவஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் வெருகல் பிரதேச சபையின் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தவிசாளர், உதவி தவிசாளர், உறுப்பினர்கள் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்த மக்களுக்கான உலர் உணவுப்பொருட்களை சேருவில பகுதியில் இருந்து ஈச்சிலம்பற்று நோக்கி எடுத்து வரும்போது மகிந்தபுர பகுதியில் வைத்து மூன்று அரச அதிகாரிகள் உட்பட 21 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இந்த வெருகல் படுகொலையின் 39 ஆவது நினைவுதினம் இன்றாகும்.

அன்று நாட்டில் நிலவிய யுத்த சூழல் காரணமாக வெருகல் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்கள் ஈச்சிலம்பற்று, பூமரத்தடிச்சேனை மற்றும் மாவடிச்சேனை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்தார்கள். இவர்களுக்கான உலர் உணவுப் பொருட்களை அரசு சேருவில பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக வழங்கி வந்தது.

இந்நிலையில் 1986 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆம் திகதி அகதிகளுக்கான நிவாரணங்களை வண்டில்களைக் கொண்டுவந்து ஏற்றிச் செல்லுமாறு அப்போது மாவட்ட அரச அதிபராக இருந்த வர்ணகுலசூரியவால் மக்களுக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் முகாம்களுக்கு பொறுப்பான அரச அதிகாரிகள் மூவர் உட்பட 23 பேர் மாட்டு வண்டில்களுடன் சேருவில நோக்கிச் சென்றார்கள்.

அங்கிருந்து நிவாரணப்பொருட்களை ஏற்றிக்கொண்டு ஈச்சிலம்பற்று நோக்கி வரும்போது மகிந்தபுரவில் வைத்து ஆயுதம் தாங்கிய நபர்களினால் இவர்கள் வழிமறிக்கப்பட்டு பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரம் அழைத்துச் செல்லப்பட்டு முழங்காலில் இருக்க வைத்து பின்னர் வெட்டியும், துப்பாக்கியால் சுட்டும் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள்.

இதில் மூன்று அரச அதிகாரிகள் உட்பட 21 பேர் படுகொலை செய்யப்பட்டதோடு இருவர் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் உயிர் தப்பியிருந்தார்கள். படுகொலை செய்யப்பட்டவர்களில் இருவர் முஸ்லிம் சகோதரர்களாவர்.

இந்தப் படுகொலைச் சம்பவத்தில் பின்வரும் நபர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள்.

1. அண்ணாமலை தங்கராஜா - கிராம சேவகர் (தம்பலகாமம்) - ஈச்சிலம்பற்று முகாம்
2. அலிபுகான் - கிராம சேவகர் (தோப்பூர்) - பூமரத்தடிச்சேனை முகாம்
3. அயாசு முகம்மது அப்துல்லத்தீப் - (பாலத்தோப்பூர்) - மீள்குடியேற்ற உத்தியோகத்தர் - பூநகர் முகாம்
4. கோணாமலை வேலாயுதம் - பூமரத்தடிச்சேனை
5. கதிர்காமத்தம்பி -விநாயகமூர்த்தி - பூமரத்தடிச்சேனை
6. தெய்வேந்திரம் நவரெட்ணம் பூமரத்தடிச்சேனை
7. தம்பிராசா நவரெட்ணம் பூநகர்
8. கனகசபை கனகசுந்தரம் - பூநகர்
9. கதிர்காமத்தம்பி செல்லத்தம்பி - பூநகர்
10. மூத்ததம்பி காசிப்பிள்ளை - பூநகர்
11. கதிர்காமத்தம்பி நாகராசா - பூநகர்
12. வீரபத்திரன் நடேசபிள்ளை - பூநகர்
13. முத்தையா காளிராசா - பூநகர்
14. முத்துக்குமார் வேலுப்பிள்ளை - பூநகர்
15. வைரமுத்து சித்திரவேல் - விநாயகபுரம், ஈச்சிலம்பற்று
16. சித்திரவேல் சிவலிங்கம் - விநாயகபுரம், ஈச்சிலம்பற்று
17. வீரபத்திரன் சோமசுந்தரம் - விநாயகபுரம், ஈச்சிலம்பற்று
18. சித்திரவேல் தம்பாப்பிள்ளை - விநாயகபுரம், ஈச்சிலம்பற்று
19. நல்லையா பரமேஸ்வரன் இலங்கைத்துறை முகத்துவாரம்
20. தாமோதரப்பிள்ளை தங்கராசா - ஈச்சிலம்பற்று
21. புண்ணியம் மதிவதனன் - பூமரத்தடிச்சேனை

அத்துடன் வீரபத்திரன் சோமசுந்தரன், வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் தப்பியிருந்தார்கள்.

# கோர விபத்தில் ஓட்டோ சாரதி பரிதாபப் பலி!

*கட்டுகஸ்தோட்டை, ஜூன் 12*

*கண்டி - யாழ்ப்பாணம் ஏ - 9 வீதியில் கட்டுகஸ் தோட்டை நகரத்தில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.*

*சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த சொகுசு பஸ் ஒன்று வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோவுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.*

*நேற்று புதன்கிழமை மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் ஓட்டோவின் சாரதி படுகாயமடைந்த நிலையில் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.*

*உயிரிழந்தவர் பரகொட, அலுதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடையவர் ஆவார்.*

*இதனையடுத்து 41 வயதுடைய பஸ் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இது தொடர்பில் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

## நட்டஈடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வலிகாமம் வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

தையிட்டி விகாரை அமைந்துள்ள காணிகளைத் தவிர்த்து, அதனைச் சூழவுள்ள ஏனைய காணிகளை மாவட்ட செயலரிடம் கையளிக்கப் பணிக்கப்பட்டுள்ளது. மாவட்ட செயலர், பிரதேச செயலர் ஊடாகக் காணி உரிமையாளர்களுக்குக் காணிகளை கையளிப்பார்.

அதேவேளை, தனியார் காணிக்குள் விகாரை அமைக்கப்பட்டிருந்தால் அந்தக் காணி உரிமையாளர்களுக்குக் காணியின் பெறுமதி நட்டஈடாக வழங்குவது அல்லது மாற்றுக் காணியை வழங்குவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.

விகாரைப் பிரச்சினையை நீண்டு செல்ல அனுமதிக்க முடியாது. அதனை ஒரு மாத காலத்துக்குள் முடிக்க முடிவெடுத்துள்ளோம்." - என்றார்.

# சிறைச்சாலைகள் திணைக்களத்தின் புதிய ஊடகப் பேச்சாளராக ஜகத் வீரசிங்க நியமனம்!

கொழும்பு, ஜூன் 12

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் புதிய ஊடகப் பேச்சாளராக ஜகத் வீரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதி மோசடிக் குற்றச்சாட்டின் கீழ் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த டபிள்யூ.எச். அத்துல திலகரத்ன என்பவர், 2025 வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் சட்டவிரோதமாக விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் எழுந்து வரும் சர்ச்சைகளைக் கருத்தில்கொண்டு சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளராகக் கடமையாற்றிய காமினி பி. திசாநாயக்க, சிறைச்சாலைகள் பதில் ஆணையாளரிடம் தனது இராஜினாமாக் கடிதத்தை இன்று வியாழக்கிழமை சமர்ப்பித்திருந்தார்.

இதனையடுத்து, சிறைச்சாலைகள் திணைக்களத்தின் புதிய ஊடகப் பேச்சாளராக ஜகத் வீரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

# முல்லைத்தீவில் திடீரென உருவான பௌத்த விகாரை வடிவிலான பதாதை!

*முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கு அருகில் உள்ள தனியார் காணி ஒன்றில் இரு நாட்களுக்கு முன்பு திடீரென இரவோடு இரவாக பௌத்த சமயத்தை போதிக்கும் வகையில் மகிந்த தேரரின் இலங்கை வருகையும், பௌத்த மதத்தினை ஸ்தாபித்தலும் என தலைப்பிடப்பட்டு பௌத்த விகாரை வடிவிலான உருவம் ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது.*

*காட்சிப்படுத்தப்பட்ட பௌத்த விகாரை வடிவிலான பதாதை இனம்தெரியாத நபர்களினால் நேற்று புதன் கிழமை (11) இரவு அகற்றப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.*

# கணவனால் தீ வைத்து எரிக்கப்பட்ட மனைவி சிகிச்சை பலனின்றி சாவு!

சிலாபம், ஜூன் 12

கணவனால் தீ வைத்து எரிக்கப்பட்டுப் படுகாயமடைந்த நிலையில் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மனைவி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் புத்தளம் - சிலாபம் , அம்பகதவில பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தாய் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உயிரிழந்த மனைவி வர்த்தக வளாகம் ஒன்றில் பணிபுரிந்து வந்துள்ளார்.

தனது மனைவி தன்னுடன் பணிபுரியும் சக ஊழியருடன் தகாத உறவில் ஈடுபட்டிருப்பதாகக் கணவன் சந்தேகமடைந்துள்ளார்.

இதனால் மனைவிக்கும் கணவருக்கும் இடையில் தினமும் தகராறு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த 6 ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் வழமை போன்று கணவர் தனது மனைவியுடன் தகராறில் ஈடுபட்டுள்ளார்.

தகராறு எல்லை மீறியதால் கோபமடைந்த கணவன் தனது மனைவியை தீ வைத்து எரித்து அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

படுகாயமடைந்த மனைவி பிரதேச மக்களின் உதவியுடன் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று புதன்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்று தலைமறைவாகியிருந்த கணவன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட கணவன் சிலாபம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சிலாபம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# CHAMBER OF NORTHERN EXPORTERS,

Registered Number: G A 00312624

E Mail: info@cne.lk Phone: +94 764328771

CNE CHAMBER OF NORTHERN EXPORTERS

# VACANCY ANNOUNCEMENT

**Chamber of Northern Exporters (CNE) a nonprofit registered organization, leading exporters in Northern Province of Sri Lanka actively involving exporting of authentic geographical identity products and CNE members had formed Chamber for overcome the challenges and improve the export market linkages of Small Medium Enterprises, Cooperative Societies and women headed businesses.**

Chamber of Northern Exporters is seeking application from potential candidates for the Posts of:

1. General Manager (Senior Manager Category) - HM 1 - 1
2. Management Assistant/Financial Assistant - MA 2 – 1
3. Management Assistant (Administration) - MA 2 – 1

## General Manager (Senior Manager Category) - HM 1 – 1

**Qualifications:**

- A Bachelor's Degree in Business Administration/International Trade Agriculture/ Fisheries or any other degree in the relevant to the subject area of the post which is recognized by the U.G.C
- A Post Graduate qualification (Masters') in the relevant field or Associate Membership of a recognized professional Chartered Institute, which is relevant to the subject area of the post is an advantage.
- 5 – 8 years of proven experience in a senior leadership role, preferably in export, trade facilitation, or cooperative development.
- Strong understanding of export documentation, global market trends, and supply chain coordination.
- Familiarity with government regulations and trade promotion schemes.
- Fluency in Tamil and English. Sinhala and French is a plus quantitation.

## Management Assistant/Financial Assistant - MA 2 – 1

**Qualifications:**

Having obtained a certificate of proficiency not below than the National Vocational Qualification Level 5,in the relevant field issued by a Technical / Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission. (Accounting / Commerce / IT / Finance)

## Management Assistant (Administration) - MA 2 – 1

**Qualifications:**

Having obtained a certificate of proficiency not below than the National Vocational Qualification Level 5,in the relevant field issued by a Technical / Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission (HR/Commerce/IT/Management)

Interested candidates may submit their detailed CV/application and certified copies of certificates to the following address with 15 days of advertisement. Only shortlisted candidate will be called for an interview. The vacant position can be seen on the website of CNE of www.cne.lk

**Eng. T. Thayaparan,**
Secretary,
Chamber of Northern Exporters,
1 st Floor, NHDA Building,
Kandy Road,
Jaffna.
13.06.2025







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.06.2025 வெளியிடப்பெற்றது.